முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 26.02.2026. அ.வ.எண். 63/2023. பி.வா.சா.1.தெய்வஜோதி, க/பெ. காளிச்சாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான்இந்த வழக்கில் 2 ம்பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ரத்தினம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 80 வயது இருக்கும். எனது தாயார் என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தாயார் அவரது வேலைகளை அவரே செய்து கொள்வார் என்றால் கோல் ஊன்றிதான் நடப்பார். இருந்த போதும் அவரது வேலைகளை அவரே செய்து கொள்கிறார் என்றால் சரியல்ல. வழக்கின் சம்மந்தமான அனைத்து விவரங்களும் எனது தாயாருக்கு தெரியும் என்றால் தெரியும்.

2) வழக்கில் எனது தரப்பு சாட்சியாக எனது அம்மாவை விசாரணை செய்யலாம் என்றால் சரிதான். நானும் எனது தாயாரும் சேர்ந்து அ.வ.எண். 272/2016 வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதி ஆனந்தஜோதியை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். காளியப்ப கவுண்டருக்கு நானும், எனது தாயாரும் மட்டும் தான் வாரிசு என்று வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும் எனது தாயார் மட்டும் தான் வாரிசுகள் என்று சமரச தீர்வு மையத்தில் தீர்ப்பாணை பெற்றுள்ளோம் என்றால் சரிதான்.

3) ஆனந்த ஜோதியை ஏமாற்றி அவருக்கு வரக்கூடிய சொத்துக்களை பறிக்க வேண்டும் என்ற நோக்கில் அவரை விட்டுவிட்டு நானும் எனது அம்மாவும் மோசடியாக மேற்படி தீர்ப்பாணையை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி

ஒப்பம்/- (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

ஆனந்த ஜோதியை கட்சி சேர்த்திருந்தால் வழக்கின் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் அவரை மறைத்து வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நானும், எனது அம்மாவும் வாரிசு என்று சொல்லி தான் வாதி ஆனந்த ஜோதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4) பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 197/2014 என்ற வழக்கை என்மீதும், எனது தாயார் மீதும் வாதி ஆனந்தஜோதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டருக்கு வாதி ஆனந்தஜோதி வாரிசு என்பதால் தான் மேற்படி பாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. அ.வ.எண். 197/2014 வழக்கில் துளசியம்மாளும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான் .. அவர் எனது அத்தை ஆவார். எனது அத்தை பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 105/2012 என்ற பாக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

5) எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால் கையெழுத்து மட்டும் செய்வேன். மேற்படி அ.வ.எண். 105/2012 என்ற பாக வழக்கில் நான், எனது அம்மா, மற்றும் வாதி ஆனந்த ஜோதி பிரதிவாதிகள் என்றால் சரிதான். வாதி ஆனந்த ஜோதி காளியப்ப கவுண்டரின் வாரிசு என்பதால் தான் எனது அத்தை மேற்படி பாகவழக்கில் அவரையும் தரப்பினராக சேர்த்துள்ளார் என்றால் எப்படி சேர்த்தார்கள் என்று எனக்கு தெரியாது.

6) வசந்தாமணி எனது பக்கத்து தோட்டத்துக்காரர் என்றால் சரிதான். அவர் கோவை மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.749/2019 என்ற

ஒப்பம்/- (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

பாக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் நான், எனது அம்மா, மற்றும் வாதி ஆனந்த ஜோதி பிரதிவாதிகள் என்றால் சரிதான். வாதி ஆனந்த ஜோதி காளியப்ப கவுண்டரின் வாரிசு என்பதால் தான் வசந்தாமணி மேற்படி பாகவழக்கில் அவரையும் தரப்பினராக சேர்த்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

7) வாதி ஆனந்த ஜோதி காளியப்ப கவுண்டரின் வாரிசு தான் அவருடைய சொத்தை பறிப்பதற்காக அவர் யார் என்றே தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பாக வழக்குகளில் நானும், எனது அம்மாவும் தரப்பினராக இருந்தும் தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி